## ஒரு மாநகரம் வளரும் விதம்

## ரொறன்ரோ மாநகரத்தில் திட்டமிடற் பணி

மக்கள் வாழ்ந்து, கற்று, உழைத்து, நடமாடி, விளையாடும் இடங்களே மாநகரங்கள். ஆதலால் அவை பல்வேறு சேவைகளை வழங்க வேண்டியுள்ளது – அவற்றுள் பள்ளிக்கூடங்கள், பொழில்கள், சுகாதார பராமரிப்பு, கடை கண்ணிகள், உணவகங்கள், போக்குவரத்து வசதிகள் சிலவாகும். உயிர்க்களை ததும்பும் மாநகரங்களே குடிமக்களையும், பயணிகளையும், தொழிலகங்களையும் ஈர்ப்பவை.

ரொறன்ரோ மாநகரத்தின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் நெறிப்படுத்துவதில் அதன் மாநகர திட்மிடற் பகுதி உதவி வருகிறது. முக்கிய சமூக, பொருண்மிய, சூழல் நலன்களைக் கருத்தில் கொண்டு, சமூகத்துடனும் பிற மாநகரப் பகுதிகளுடனும் கூடி, மாநகர விருத்தி இலக்குகளையும் கொள்கைகளையும் அது வகுத்து வருகிறது.

நற்றிட்டம் சீரான வளர்ச்சிக்கு இட்டுச்செல்லும். நாம் எத்தகைய சமூகத்தை நாடுகிறோமோ அத்தகைய சமூகத்தை அமைப்பதற்கு அது உதவும்.

## திட்டமிடுவோர் வகிக்கும் பங்கு யாது?

திட்டமிடும் பணியாளர்கள் மக்களின் கருத்துக்களைத் திரட்டி ஆராய்ந்து, மாநகரச் சூழலைப் பாதுகாத்து, மேம்படுத்தும் திட்டங்களையும் கொள்கைகளையும் பணிகளையும் உருவாக்குவதிலும் மீள்நோக்குவதிலும் ஈடுபட்டு வருகிறார்கள். மாநகராட்சி மன்றத்துக்கு அவர்கள் உறுதுணையும் மதியுரையும் நல்கி வருகிறார்கள். உரிய பணிகளை அவர்கள் விதந்துரைத்து வருகிறார்கள். ஒரு சிறந்த மாநகரத்தை உருவாக்குவதற்கான இலக்குகளை எய்துவதற்கு உதவும் நோக்குடன் சமூகத்துடனும் மாநகரளாவிய குழுமங்களுடனும் அவர்கள் ஒட்டி உறவாடி வருகிறார்கள்.

ரொறன்ரோ மாநகர திட்டமிடற் பகுதி வட்டார வாரியாக, நான்கு செயற் பிரிவுகளாக அமைக்கப்பட்டுள்ளது – எற்றோபிக்கோ யோர்க், நோர்த் யோர்க், ரொறன்ரோ, ஈஸ்ட் யோர்க் மற்றும் ஸ்காபறோ:

1. சமூகத் திட்டமிடற் பிரிவு - பொதுமக்களுடனும் மாநகர சேவைத் துறையினருடனும் கலந்துசாவி, விருத்தித் திட்டப்பணிகள் குறித்து மதியுரை கூறி வருகிறது. ஒரு விருத்தித் திட்டத்தின் அங்கங்கள் அனைத்தையும் மீள்நோக்கி, பகுத்தாய்ந்து மதியுரை கூறி வருகிறது.

2. கொள்கை மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு – காணிப் பயன்பாடு, வீடமைப்பு, சமூக சேவைகள், சூழல் பற்றிய விரிவான ஆராய்ச்சியை அடிப்படையாகக் கொண்டு திட்டமிடற் கொள்கையை வகுத்து வருகிறது. பாரம்பரியத்தைப் பேணும் திட்டப்பணிகளையும் திட்டநிகழ்வுகளையும் நிருவகித்து, மேம்படுத்தி வருகிறது.

3. மாநகர வடிவமைப்புப் பிரிவு – எமது வீதிகளையும் பொழில்களையும், வெளிகளையும் செவ்வனே வடிவமைக்கும் பணியை மேம்படுத்தி வருகிறது. ஒரு குறித்த காணித் துண்டில் கட்டடங்களை அமைத்து, இணைத்து, உருவாக்குவதற்கு வழிகாட்டி வருகிறது.

4. போக்குவரத்துப் பிரிவு – பொது போக்குவரத்துச் சேவையை மேம்படுத்துவதிலும், தனி வாகனப் பாவனையைத் தவிர்த்து நடை, சைக்கிள், சுரங்கத் தொடருந்து, மின்பேருந்து போன்ற மாற்றுப் பயண மார்க்கங்களை நாடும்படி தூண்டுவதிலும் ஈடுபட்டு வருகிறது.

**ஒன்ராறியோவில் திட்டமிடல்**

ரொறன்ரோ மாநகரத்தில் பற்பல சட்டங்களும் ஒழுங்குவிதிகளும் வலய உபவிதிகளும் கொள்கைகளும் திட்டமிடும் பணியாளர்களை வழிநடத்தி வருகின்றன:

திட்டமிடற் சட்டம்

- ஒன்ராறியோ முழுவதும் திட்மிடலை நெறிப்படுத்துகிறது
- ஒவ்வொரு மாநகரமும் ஓர் அதிகாரபூர்வமான திட்டத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்று விதிக்கிறது
- காணி விருத்தியை அங்கீகரிக்கும் படிமுறைகளையும், பொதுமக்களுடன் கலந்துசாவுவதற்கான ஆகக்குறைந்த நியதிகளையும் நிர்ணயிக்கிறது
- ஒன்ராறியோ மாநகராட்சிச் சபைக்கு-மாகாணக் கொள்கைக் கூற்றுத் துறைக்கு மேன்முறையீடு செய்யும் உரிமைகளை நிர்ணயிக்கிறது
- சூழல், பொருளாதாரம், வீடமைப்பு போன்ற மாகாண நலன்கள் தொடர்பான விடயங்களைத் திட்டமிடும் பணியினை உரிய கொள்கைப்படி நெறிப்படுத்துகிறது
- மாகாணக் கொள்கைக் கூற்றுத் துறையின் அதிகாரபூர்வமான திட்டத்துக்கு “இசைவாக” அமைய வேண்டும்
- ரொறன்ரோவின் தலையாய கொள்கைக் குறிக்கோளின்படியே உரு மாற்றத்தை நிர்வகித்து நெறிப்படுத்த வேண்டும்
- அதிகாரபூர்வமான திட்டத்தில் வரையறுத்த கொள்கைகளுக்கும் பிரமாணங்களுக்கும் அமையவே கட்டுமான விண்ணப்பங்கள் மதிப்பிடப்படுகின்றன
- உபவிதிகள் அனைத்தும் அதிகாரபூர்வமான திட்டத்தில் வரையறுத்த வலய உபவிதிகளின் நோக்கத்தைப் புலப்படுத்த வேண்டும்
- அதிகாரபூர்வமான திட்டத்தை “இடத்துக்கேற்ப” நடைமுறைப்படுத்துகிறது
- காணிப் பாவனையையும் கட்டட நிர்மாணத்தையும் ஒழுங்குபடுத்துகிறது
- ஓர் ஆதனத்தில் எதனை நிர்மாணிக்கலாம் என்பதை வரையறுக்கிறது. எ-கா:
  - குறித்த இடத்தை எவற்றுக்குப் பயன்படுத்த அனுமதிக்கப்படும் என்பது
  - கட்டட அடர்த்தி
  - கட்டட உயரம், இடைவெளி
  - பொழில், வெளி நியதிகள்

இசைவிப்புக் குழு

- பின்வருவன போன்ற சிறிய திட்டமிடல் விடயங்களை விசாரித்து, முடிவெடுக்கும் அதிகாரம் மாநகராட்சி மன்றத்தால் நியமிக்கப்படும் வட்டாரக் குழாங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது:
  - வலய உபவிதியில் சிறிய மாற்றங்கள்;
  - சட்டப்படி அமையாது பயன்படுத்துவதற்கான விண்ணப்பங்கள்
  - காணியைப் பிரிப்பதற்கு இசைவு நாடும் விண்ணப்பங்கள்
- அனைத்து முடிபுகளையும் குறித்து ஒன்ராறியோ மாநகராட்சிச் சபைக்கு மேன்முறையீடு செய்யலாம்.

www.toronto.ca/planning/comm_adj.htm

ஒன்ராறியோ மாநகராட்சிச் சபை

- இது ஆதன, திட்டமிடல் விடயங்கள் குறித்து மாகாண அரசினால் அமைக்கப்பட்ட மேன்முறையீட்டுச் சபை ஆகும்
- கட்டுமான விண்ணப்பங்கள் குறித்து மாநகராட்சி மன்றம் எடுத்த முடிபுகளுக்கு எதிரான மேன்முறையீடுகளை இது விசாரிக்கும்
- இசைவிப்புக் குழுமுன் வைக்கப்படும் மேன்முறையீடுகளையும் இது விசாரிக்கும்
- சட்டத்தில் நிர்ணயித்த தவணைக்குள் மாநகராட்சி மன்றம் ஓர் அலுவலைப் பூர்திசெய்யத் தவறினால், அதனைக் குறித்தும் மேன்முறையீடு செய்யலாம்

www.toronto.ca/torontoplan

பங்கு பெறும் விதம்

உங்கள் சமூகத்தில் நிகழ்வதை அறிந்து, பொதுக் கூட்டங்களில் கலந்துகொள்வதன் மூலம் திட்டமிடும் படிமுறையில் நீங்கள் பங்குபெற முடியும். உங்கள் பங்களிப்புடன் உங்கள் அயலின் எதிர்காலம் பற்றிய சிறந்த முடிபுகளை மாநகராட்சி மன்றத்தால் எடுக்க முடியும்.

ஓர் உத்தேச திட்டம் அல்லது கொள்கை மாற்றம் முழுவதிலும் அல்லது அதன் ஒரு கூறில் உங்களுக்கு நாட்டம் இருந்தால்:

- அந்த விடயம் பற்றி நீங்கள் இயன்றளவு விபரங்களை அறிந்து, உங்களைப் பொறுத்தவரை அந்த விடயம் எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்
- பொதுக் கூட்டங்களிலும் தகவல் அமர்வுகளிலும் கலந்துகொண்டு கருத்துரைக்க வேண்டும்;
- உங்கள் எண்ணங்களை உங்கள் மன்றாளருக்கு எழுதி அனுப்ப வேண்டும்;
- மாநகராட்சி மன்றத் திட்டமிடற் பணியாளர்களுடன் தொடர்புகொள்ள வேண்டும்;
- மாநகரத் தேர்தல்களில் பங்குபற்ற வேண்டும்.